1979 நவம்பர் 5] [பி. எச். பாண்டியன்]

ஏற்பாடுகளைச் செய்யுங்கள் என்று எனக்கு எழுத்து மூலமாகத் தந்திருந்தால் அது முறை. இங்கே வந்து எழுப்புவது என்பது விதிகளின் படியும் ஏற்றுக் கொள்ளக் கூடாத ஒன்று.

ஈ. கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக் கொள்வது குறித்து.

திரு. இரெ. இராசமாணிக்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான பொருள்கள் குறித்து 41-வது விதியின் கீழே, பல தீர்மானங்களைத் தந்திருக்கிறோம். . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை நாளைக்கு எடுத்துக் கொள்கிறோம். நேற்றைய முன்தினமே பேராசிரியர் சொல்லி, இன்றைய விவாதத்திற்குப் பிறகு அதைப்பற்றியெல்லாம், நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது உங்களுடைய 41-வதுவிதியின்கீழ் கொடுக்கப்பட்ட கவன ஈர்ப்புத் தீர்மானம் என் கைக்கு வந்திருக்குமானால், இந்த அவையிலே வைத்திருப்பேன். வந்ததா, இல்லையா என்று என் அறையிலே வந்து கேட்டால், விளக்கமாகச் சொல்வேன்.

திரு. க.உரொ. எட்மண்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரம் முடிந்தவுடனே, சட்டசபையினுடைய இதர அலுவல்கள் ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே பல்வேறு உறுப்பினர்கள் இங்கே ஒழுங்குப் பிரச்னைகள் எழுப்பியிருக்கிறார்கள். பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்ற பெயராலே, விதிகளின் பிரகாரம், பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்றாலே If any order of the proceedings goes wrong அவ்வளவுதான். நடைமுறைகளிலே ஏதாவது தவறுகள் ஏற்படுமேயானால் அப்பொழுது பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்ப வேண்டுமென்று விதிமுறைகள் இருக்கின்றன. நம்முடைய சட்டமன்ற விதி 83, கிளாஸ் (3)

"A point of order shall relate to the interpretation or enforcement of these rules or such articles of the Constitution as regulate the business of the House and shall raise a question which is within the congnizance of the Speaker"

என்று மிகத் தெளிவாக இருக்கிறது. கேள்வி நேரம் முடிந்த உடனே, நீங்கள் அடுத்த ஒரு பிரச்னைக்குப் போவதற்கு முன்னாலேயே நான் அதைக் கொடுத்திருக்கிறேன், இதைக் கொடுத்திருக்கிறேன், இதை ஏன் எடுக்கவில்லையென்று மாண்புமிகு உறுப்பினர்கள் பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்புவது சட்டமன்றத்திலே சர்வ சாதாரணமான காரியமாக இருக்கிறது. ஆகவே, அதற்குத்தாங்கள் ஒரு முடிவு கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு: அவர் ரூல் கோட் செய்ததால் கூறுகிறேன். ஸ்பெஸிஃபிக்காக இருந்தால் 83 (3) விதியின்கீழ் எழுப்பலாம். ஸ்பெஸிஃபிக்காக இல்லையென்றால், ரூல் 242 அடிப்படையிலே, சபாநாயகராகிய நீங்கள் அனுமதி அளிக்கிறீர்கள். அவ்வளவு தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுப்பு, எனக்காக வாதாடுகிறார்கள், பரவாயில்லை. நான் என்னுடைய சொந்தக் காலிலேயே நின்று சமாளிக்கிறேன், அவர்கள் உட்கார வேண்டும்.

(3) அறிக்கை அளித்தல்.

அ. துணை வினா ஒன்றுக்கு அளித்த விடைக்கு திருத்த அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 10-1-1978-ஆம் தேதியன்று, 186-ஆம் எண் வினாவின் கீழ், எழுப்பப் பெற்ற துணை வினாவிற்கு அளிக்கப் பெற்ற விடைக்கு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் திருத்த அறிக்கை ஒன்றை அளிப்பார்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவரவர்களே, இப்பேரவையில் 10-1-7௦ அன்று வேலை நிதி ஊழியர்களின் சம்பள விகிதங்கள் திருத்தம் பற்றிய வினா ஒன்றிற்கு பதிலளிக்கையில் திரு. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம் அவர்களின் துணைக் கேள்விககு, அரசு ஆணை எண். 1632, பொதுப்பணித் துறை, நாள் 26-10-77-ல் திருத்தப்பட்ட சம்பள விகிதங்கள் நில நீர்ப் பிரிவிலுள்ள எல்லா வேலை நிதி ஊழியர்களுக்கும் பயன் விளைவிக்கும் என்று அமைச்சர் திரு. இராமச்சந்திரன் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. நில நீர்ப் பிரிவிலுள்ள 18 வகை வேலை நிதி ஊழியர்களில், 11 வகையினருக்கு மட்டுமே மேற்கூறிய அரசு ஆணையில் சம்பள விகிதங்கள் திருத்தப் பட்டுள்ளது என்பதுதான் சரியான நிலைமை என்று இப்போது தெரிவிக்கப்பட்டுள்ளது, நிலநீர்ப் பிரிவிலுள்ள ஏனைய ஏழு பிரிவினருக்கு சம்பள விகிதங்களை திருத்துவது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது.

(4) அறிவிப்புகள்.

(அ) அலுவல் ஆய்வுக் குழு கூட்டம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 3-11-79 அன்றைக்கு அலுவல் ஆய்வுக் குழு இன்று காலை 10-30 மணிக்கு கூடுமென்று நான் அறிவித்திருந்தேன். அதை நான் இப்பொழுது ஒத்தி வைத்துள்ளேன் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.